# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC.9/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | அமினாபீ |
| Father Name/ Husband Name : | அபுசாலிஹ் |
| Village : | முகம்மது பட்டினம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.08.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் என்னை விட்டு வேறோரு பெண்ணுடன் சென்றுவிட்டதால் நான் 3 குழந்தைகளை வைத்து கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வருவதால் எனது குழந்தைகளின் படிப்பு செலவுக்காகவும், குடியிருக்க வீட்டு வசதி கோரியும், அவருடைய வயலினை எனது வாழ்வாதாரத்திற்காக கொடுக்கும்படியும், மேஜராகியுள்ள எனது இரண்டு பெண்களுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளேன்.

எத்தனை நாட்களாக நான் 1ம் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் 13 வருடங்களாக பிரிந்து வாழ்கிறேன். 2024ம் வருடம் தான் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு முன் நான் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக AWPS Perambalur காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்த தேதி என்ன என்றால் 05.01.2024ம் தேதி புகார் கொடுத்தேன்.

அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்த போது நான் எழுதி கொடுத்த சமதான வாக்குமூலத்தில் "எனக்கு வேறோரு நபருடன் பழக்கம் ஏற்பட்டது இந்த விஷயம் எனக்கு கணவருக்கு தெரிந்ததால்" என்று எழுதி மறுபடியும் அதனை அடித்து திருத்தம் செய்து "எனக்கு வேறோரு நபருடன் பழக்கம் ஏற்பட்டதாக எனது கணவர் சந்தேகப்பட்டு எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு" என்று எழுதியுள்ளேன் என்றால் அந்த வாக்குமூலத்தை நான் எழுதவில்லை, போலிசார் தவறுதலாக அவ்வாறு எழுதிவிட்டு அவர்களே திருத்தம் செய்து மறுபடியும் சரியாக எழுதினார்கள். நான் சொல்வது பொய் என்றாலும் உண்மையாகவே அவ்வாறு தவறாக எழுதியிருந்தால் நான் அதை நன்றாக அடிக்க சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல, நான் படித்து பார்த்த பிறகு தான் அவ்வாறு எழுதி திருத்தம் செய்த விவரமே எனக்கு தெரிய வந்தது, நான் போலிசாரிடம் சமாதான வாக்குமூலத்தை திருத்த சொல்லவேயில்லை அவர்களே தான் சமாதான வாக்குமூலத்தை திருத்தியிருக்கிறார்கள். அந்த சமாதான வாக்குமூலத்தில் நான் தான் கையொப்பம் போட்டேனா என்றால் போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையோப்பம் போட்டேன்.

எங்களின் குடும்ப பிரச்சனையை ஜமாத்து மூலம் தீர்த்து கொள்கிறேன் என்றும், மேல்நடவடிக்கை தேவையில்லை என்றும் தான் நான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் மேல்நடவடிக்கை தேவையில்லை என்று நான் சொல்லவில்லை, ஜமாத்து மூலம் பேசி பார்த்து கொள்கிறேன் என்று நான் சொன்னேன், எதிர்மனுதாரர்கள் ஜமாத்திற்கு வரவேயில்லை. நான் சொல்வது பொய் என்றாலும், நான் எழுதிக் கொடுத்த சமாதான வாக்குமூலத்தில் மேல்நடவடிக்கை தேவையில்லை என்று எழுதியிருந்தது என்றால் சரியல்ல, அது போலிசாரே எழுதிக் கொண்டார்கள். காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த சமாதான வாக்குமூலம் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் மட்டும் தான் என்னுடையதா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் கொடுத் மேற்கண்ட புகாரை தவிர வேறு எதுவும் புகாரை எனது கணவரான 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த சமாதான மனுவில் சாட்சிகளாக கையொப்பமிட்ட நான்கு நபர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2011ம் ஆண்டு எனது கணவர் வீடு பார்த்து என்னையும் எனது குழந்தைகளையும்

தனிக்குடித்தனம் வைத்துவிட்டு அவர் வெளிநாட்டில் வேலை செய்து வந்தார். எனது கணவர் எந்த நாட்டில் வேலை செய்தார் என்றால் ஓமன் நாடு. எனது பிரமாண வாக்குமூலத்தில் டைல்ஸ் கம்பெனியில் வேலை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஓமன் நாட்டில் டைல்ஸ் கம்பெனியில் வேலை செய்தார். எனது கணவர் வேலை செய்து கொண்டிருந்த கம்பெனிக்கு என் கணவர் மீது கிரிமினல் வழக்கு இருப்பதாக சொல்லி நான் கடிதம் அனுப்பியதால் தான் என் கணவரின் வேலை பறிபோனது என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர்கள் என்னை குடும்ப வன்முறை செய்தார்கள் என்பது குறித்து நான் ஜமாத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். ஜமாத்தில் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள் ஆனால் எதிர்மனுதாரர்கள் விசாரணைக்கு வரவில்லை. எதிர்மனுதாரர்கள் ஜமாத்தில் விசாரணைக்கு வரவில்லை என்பதற்கான ஆதாரங்கள் ஏதேனும் இந்த நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர்கள் என்னை குடும்ப வன்முறை செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்தாரா என்றால் ஆமாம், அதன்பிறகு தான் 1ம் எதிர்மனுதாரர் என்னை தனிக்குடித்தனம் வைத்தார்.

என் கணவர் வெளிநாட்டில் இருந்தபோது எதிர்மனுதாரர்கள் என்னை கொடுமை படுத்தியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் வயதானவர் என்பதால் அவர் என்னை கொடுமை படுத்தும் அளவிற்கு தெம்பு இல்லை என்றால் சரியல்ல. எனது மனுவில் நான் எதிர்மனுதாரர்களுடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்ததாக சொல்லும் சமயத்தில் 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் வெளியூரில் வேலை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வேலையில் தான் இருந்தார்கள் என்னுடன் சண்டை போடும் அளவிற்கு வீட்டிலேயே இல்லை என்றால் சரியல்ல, அவர்களுக்கு திருமணம் ஆன பிறகு தான் அவர்கள் வெளியூருக்கு சென்றார்கள். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் 3, 4 எதிர்மனுதாரர்கள் வெளியூரில் வேலை செய்து கொண்டிருக்கும்போது கூட்டுக் குடும்பமாக வாழ்ந்ததாக சொல்லி நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் திருமணத்தின் போது 33 பவுன் நகை மற்றும் 50 ஆயிரம் ரொக்க பணம் எனது பெற்றோர் கொடுத்தார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல, எனது பெற்றோர்கள் எனக்கு 33 பவுன் நகையையும், சீர் வரிசை பொருட்களையும் 50 ஆயிரம் ரொக்கப் பணத்தையும் கொடுத்தார்கள். எனக்கு போட்ட நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் எதுவும் எதிர்மனுதாரர்களிடம் இல்லை என்றாலும் அவை அனைத்தும் என்னிடம் தான் இருக்கிறது என்றால் சரியல்ல எனக்கு போட்ட நகைகளில் 5 பவுன் மட்டும் எதிர்மனுதாரர்களிடம் இருக்கிறது. அவ்வாறு 5 பவுன் எதிர்மனுதாரரிடம் இருப்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2014ம் வருடம் எதிர்மனுதாரர்கள் என்னிடம் வந்து பிரச்சனை செய்ததாக நான் சொல்லியது தவறு என்றால் சரியல்ல. உண்மையிலேயே மேற்சொன்ன படி பிரச்சனை செய்து இருந்தால் நான் அவர்களுக்கெதிராக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் நான் பிரச்சனை செய்யவில்லை என்பதால் தான் நான் அவர்களுக்கெதிராக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது குழந்தைகளின் படிப்பு செலவிற்காக 1ம் எதிர்மனுதாரர் எந்த பணத்தையும் தரவில்லை என்பதால் தான் நான் எனது நகைகளை விற்றும் எனது சகோதர சகோதரிகளிடம் கடனை வாங்கி எனது குழந்தைகளை படிக்க வைத்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியது தவறு என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் குழந்தைகளின் படிப்பு செலவிற்காக தேவையானதை செய்தார் என்றால் சரியல்ல.

கடந்த 2013ம் வருடத்திலிருந்து 2018ம் வருடம் வரை 1ம் எதிர்மனுதாரரான எனது கணவர் எனது தந்தை முஹம்மது யாகூப்பின் வங்கி கணக்கிற்கு ரூபாய் 60,000/- மற்றும் எனது வங்கி கணக்கிற்கு கிட்டத்தட்ட லட்சக்கணக்கில் பணம் அனுப்பியிருக்கிறார் என்றால் உண்மையில்லை. எனக்கு தெரிந்தவர் ஜெய்ப்புனிஷாவின் கணக்கிற்கு எல்ஜசி போடவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதன் பேரில் 1ம் எதிர்மனுதாரர் ரூபாய் 20,000/-த்தை அனுப்பியிருக்கிறார் என்றால் சரியல்ல, ஜெய்ப்புனிஷா எனக்கு யார் என்று தெரியாது. எனது கணவரின் ATM Card அவர் வெளிநாட்டில் இருந்த போது என்னிடம் தான் இருந்தது என்றால் சரியல்ல, எனது கணவருக்கு ATM Card அப்போது கிடையாது. நான் சொல்வது பொய்

என்றாலும் எனது கணவரின்  ATM Card என்னிடம் தான் இருந்தது என்பதால் தான் அவருடைய வங்கி கணக்கிற்கே அவர் பணம் அனுப்பியிருக்கிறார் என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை நாளை ஒத்தி வைக்கப்படுகிறது).

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.